176

SANAGRANTHARATHNAMALA—1.

SRIGUNARATHNAKOSAM

28 AUG 19

with Tamil Commentary

BY

MEYYUVAIYANGAR.

Q25:417
N24
181253

ஸுதர்சன க்ரந்தமாலா—1

28 AUG 1924

ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்த

ஸ்ரீ குணரத்னகோசம்

என்கிற

ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் ஸ்தோத்ரம்.

பூர்வீகர்களின் வ்யாக்யானத்திற்கு அநுகுணமாக
ஸ்ரீரங்கம் K. S. T. பாடசாலை பண்டிதர்
வித்வான் ஸ்ரீ மெய்யுவய்யங்கார்
எழுதிய தமிழ் ப்ரதிபததாத்பர்யத்துடன்

ஸ்ரீரங்கம்:
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,
1924

காபிரைட் ரிஜிஸ்டர்ட்.

இதின் விலை] [அணா எட்டு.

28 AUG 1924

ஸ்ரீ:

விஷயஸூசிகை.

—— * ——

ச்லோகம்.	விஷயம்	பக்கம்.
1.	"ச்ரியை" இத்யாதி ச்லோகத்தில்—ஸ்ரீஹரீதவம்ச முக்தாமணியாகிய ஸ்ரீபராசரபட்டர் ஸ்ரீமஹாலெக்ஷ்மியின் அவதாரமாகிய ஸ்ரீரங்கநாயகியை ஸ்துதிப்பதற்கு ஸ்ரீகுணரத்நகோசம் என்கிற ப்ரபந்தத்தைச்செய்வதாக உத்தேசித்து ஆரம்பிக்கும் ப்ரபந்தம் விக்நமன்றியில் முடிவுபெறுதலின் பொருட்டு முதலில் அந்த ஸ்ரீமஹாலெக்ஷ்மியையே நமஸ்கரிக்கிறார்.	2
2.	"உல்லாஸ" இத்யாதி ச்லோகத்தில்—"ச்ரேயாம்ஸி பஹூநி விக்நாநி" என்கிறபடியே விக்நாதிக்யசங்கையினால் அவைகளை நிவ்ருத்திப்பதின்பொருட்டு மறுபடியும் ஸ்ரீமஹாலெக்ஷ்மியையே ஆச்ரயிக்கிறார்.	2
3.	"அறுகல" இத்யாதி ச்லோகத்தில்—அதிக மங்களஸித்தியின்பொருட்டு தன்னிடத்தில் ஸ்ரீமஹாலெக்ஷ்மியின் கடாக்ஷங்களைப் பிரார்த்திக்கிறார்.	3
4.	"யத்ப்ரூபங்கா:" இத்யாதி ச்லோகத்தில்—விசேஷமங்களங்கள் உண்டாகவேண்டி மறுபடியும் ஸ்ரீமஹாலெக்ஷ்மியின் கடாக்ஷங்களை ப்ரார்த்திக்கிறார்.	5

0

5. "யத்யாவத்" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீமஹாலக்ஷ்மியின் கடாக்ஷத்தினால் அவளது ஸ்வரூபரூப குணவிபூதிகளை உள்ளபடி அறிந்து அவைகளின் ஸ்துதி ப்ரம்மாதிகளாலும் அசக்யை என்பதையும் அவைகளை ஸ்தோத்ரம் செய்வதற்கு உத்யோகித்த தனது அல்பவாக்கையும் அநுஸந்தித்து இவ்விதம் ஸாஹஸ ப்ரவ்ருத்தியில் ப்ரவ்ருத்தித்த தனது வாக் ப்ரவ்ருத்திக்கு ஸ்வஸ்தியை வேண்டுகிறார். 6

6. "ஸ்தோத்ரம்" இத்யாதி ச்லோகத்தில்—ஸ்ரீ மஹாலக்ஷ்மீ ப்ரம்மாதிகளால் அசக்யஸ்தவையானாலும் அவளது குணவிஸ்தாரணத்தினால் ஸ்தோத்ருத்வம் தன்னிடத்திலேயே பர்யவஸிக்கிறதென்கிறார். 8

7. "ஸூக்திம்" இத்யாதி ச்லோகத்தில்— இவ்விதம் தனக்கு ஸ்தோத்ரம் செய்வதில் அதிகாரத்தை ஸாதித்து ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் அநுக்ரஹத்தினால் தனது ஸூக்திக்கு குணஸாமக்ரீ உண்டாக வேணும் என்று ப்ரார்த்திக்கிறார். 9

8. "அநாக்ராத" இத்யாதி ச்லோகத்தில்— முன் ச்லோகத்தில் ஸங்க்ரஹமாய் ப்ரார்த்தித்த ஸூக்தி கௌரவத்தை விஸ்தரித்து அவ்வித கௌரவத்தை ஸ்ரீ மஹாலக்ஷ்மியே விஸ்தாரப் படுத்தவேணும் என்று ப்ரார்த்திக்கிறார். 10

9. "ச்ரிய: ஸ்ரீ:" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீரங்கராஜனைவிட விசேஷித்து ஸ்ரீரங்கநாயகியை ஸ்தோத்ரம் பண்ணப்போகிற தன்னிடத்தில் ஸ்ரீரங்கராஜன் கோபம் கொள்ளாமைக்கு ஸ்ரீரங்கராஜனிடத்

தில் உமக்கு விசேஷஸந்தோஷம் உண்டாகவேண்டியே உமது வல்லபையை விசேஷித்து ஸ்தோத்ரம் செய்கிறேன் கேளும் என்று விண்ணப்பித்துக் கொள்கிறார். 11

10. "தேவி ச்ருதிம்" இத்யாதி ச்லோகத்தில்—தனது ப்ரதிஜ்ஞாநுகுணமாக ஸ்ரீமஹாலெக்ஷ்மியை ஸ்துதிக்கத்தொடங்கி ஸ்ரீமஹாலெக்ஷ்மியினது ஸ்வரூபரூபகுணாதிகளில் ச்ருதியை ப்ரமாணமாகக் காண்பித்துக்கொண்டு அர்த்தத்தினால் இந்த ஸ்தோத்ரத்துக்கு ஸ்ரீகுணரத்நகோசமென்கிற பெயரை ஸூசிப்பிக்கிறார். 13

11. "ஆஹுர்வேதா:" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீமஹாலெக்ஷ்மியின் கடாக்ஷமில்லாமையாலே சிற்சிலர்கள் பாஹ்ய குத்ருஷ்டிகளாகி ஒருவரோடொருவர் விரோதித்து நிராகரிக்கப்படுகிறார்களென்கிறார். 14

12. "மர்வலி விலஸதா" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீமஹாலெக்ஷ்மியின் கடாக்ஷமாகிற பாக்யத்தையுடையவர்களோவென்றால் அவனது மஹிமையை நன்றாகக்கண்டு அநுபவிக்கிறார்கள் என்கிறார். 16

13. "அஸ்யேசாநா" இத்யாதி ச்லோகத்தில்—ஸ்ரீஸூக்தம் ஸ்ரீமஹாலெக்ஷ்மியின் ஸம்பந்தத்தை முக்யமாகவும் புருஷஸூக்தம் முதலியதுகள் ப்ரகாராந்தரேணவும் ப்ரதிபாதிக்கிறதென்கிறார். 17

14. "உத்பாஹு:" இத்யாதி ச்லோகத்தில்—ஸ்ரீமஹாலெக்ஷ்மியை உபநிஷத்துக்கள்மட்டில் ப்ரதிபாதிக்

இறதுகளல்ல. இதிஹாஸாதிகளும் அவனது வை
பவத்தை ப்ரதிபாதிக்கிறதுகளென்கிறார் 18

15. "ஆருக்ராம" இத்யாதி ச்லோகத்தில்—உபநிஷத்தா
தி ப்ரமாணங்களால் அறியப்பட்ட அவனது ஐச்வர்
யத்தைச் சொல்லுகிறார். 19

16. "ஏகோ முக்தாதபத்ர" இத்யாதி ச்லோகத்தில்—
உலகத்தில் ஐச்வர்யம் ஸ்ரீ மஹாலெக்ஷ்மியினது
கடாக்ஷத்தினாலும் தாரித்ர்யம் அவளது கடாக்ஷமில்
லாமையாலும் உண்டாகிறதென்கிறார் 21

17. "ரதிர்மதி" இத்யாதி ச்லோகத்தில்— உலகத்தில்
ஸர்வஸம்பத்துக்களும் ச்ரீமஹாலெக்ஷ்மியின் புரு
வவிலாஸப்ரஸரங்களை நோக்கியே செல்லுகிறது
கள் என்கிறார். 22

18. "ஸஹஸ்திர" இத்யாதி ச்லோகத்தில்— வஸ்துக்
களின், தண்ணிமை லக்ஷ்மியினது கடாக்ஷஸங்
கோசத்தாலும், மேன்மை லக்ஷ்மியினது கடாக்ஷ
விகாஸத்தாலும் உண்டாவதாகச் சொல்லுகிறார். 23

19. "தாலே" இத்யாதி ச்லோகத்தில்— பகவான் லக்ஷ்
மியின் விளையாட்டுக்காக உலகத்தை ஸ்ருஷ்டிக்கி
றார் என்கிறார். 24

20. "சப்தாதீந்" இத்யாதி ச்லோகத்தில்— கரணகளே
பரங்கள் பகவத்கைங்கர்யகரணத்துக்கு ஸ்ருஷ்டிக்
கப்பட்டிருப்பதென்பதை மறந்து அவைகளை சப்
தாதிவிஷயங்களை அநுபவிக்க உபயோகப்படுத்து
கிற ஜீவராசிகளை பகவானே அவ்விதம் செய்து

கொண்டு லெக்ஷ்மிக்கு பரிஹாஸரஸத்தை உண்டு பண்ணுகிறார் என்று சொல்லுகிறார். 26

21. "யத்தூரே" இத்யாதி ச்லோகத்தில்— கீழ் ச்லோகம்வரை லக்ஷ்மிக்கு லீலாவிபூதியோகத்தைச்சொல்லி நித்யவிபூதியோகத்தைச் சொல்லுகிறார். 27

22. "ஹேலாபாம்" இத்யாதி ச்லோகத்தில்— ஈச்வரனும், அவனது இரண்டு விபூதிகளும மஹாலெக்ஷ்மிக்குப் பரிகரம் என்கிறார். 29

23. "ஆஜ்ஞா" இத்யாதி ச்லோகத்தில்— மஹாலக்ஷ்மிக்கும் அவளது பர்த்தாவுக்கும பரமபதத்தில் ஸ்ரீவைகுண்டநகரயோகத்தைச் சொல்லுகிறார். 30

24. "தஸ்யாம்" இத்யாதி ச்லோகத்தில்—ஸ்ரீவைகுண்டநகரியில் இருக்கிற அவர்களுடைய ஆஸ்தானத்தை அநுஸந்திக்கிறார். 31

25. "தத்ர" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீமஹாலெக்ஷ்மீ அந்த ஆஸ்தானத்தில் ஆதிசேஷனாகிற ஸிம்மாஸநத்தில் உலகரக்ஷையில் தீக்ஷிதரான பகவானுடன் கூட ஸர்வகாலமும் ஆநந்தாவஹையாயிருக்கிறாள் என்கிறார். 33

26. "போக்யா வாமபி" இத்யாதி ச்லோகத்தில்—ஸ்ரீமந்நாராயணனுக்கு ஸ்ரீமஹாலெக்ஷ்மிமட்டில் ஆநந்தாவஹையான பத்நியன்று அம்மஹாலெக்ஷ்மிபோல அம்மஹாலெக்ஷ்மிக்கும் அவளது பர்த்தாவுக்கும் போக்யபூதைகளாய் பூமிமுதலிய அநேகமாயிரம் பத்நிகள் பகவானுக்கு உண்டென்கிறார். 35

27. "தேஸாத்யா:" என்கிற ச்லோகத்தில்— இவ்விதம் மஹாலெக்ஷ்மிக்கு அநேகமாயிரம் ஸபத்நிகளிருக்கிருர்களென்று சொல்லி பரிசாரகவர்கத்தைச்சொல்லுகிருர். 36

28. "ஸ்வரூபம்" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீமஹாலெக்ஷ்மிக்கு பகவத்ஸ்வரூபநிரூபக தர்மத்வத்தைச் சொல்லுகிருர். 38

29. "த்வஸ்பர்சாத்" இத்யாதி ச்லோகத்தில்—பகவானிடத்தில் ப்ரயோகிக்கப்படும் மங்களபதமானது ஸ்ரீமஹாலெக்ஷ்மியின் ஸம்பந்தத்தினுல் பகவானை ஸ்பர்சிக்கிறதென்கிருர். 39

30. "அபாங்கா" இத்யாதி ச்லோகத்தில்—ஸர்வேச்வரனும் லோகபாலகர்களும் மஹாலெக்ஷ்மியின் கடாக்ஷத்தினுல் உண்டான ஐச்வர்யத்தையுடையவர்களென்று சொல்லி, ஸர்வேச்வரனையும் லோகபாலகர்களையும் பற்றிச்சொல்லும் வேதபாகமும் ஸ்ரீமஹாலெக்ஷ்மியையே சொல்லுகிறதென்கிருர். 40

31. "ஸ்வத: ஸ்ரீ:" இத்யாதி ச்லோகத்தில்— பகவானுடைய ஸ்வரூபாதிகள் ஸ்ரீமஹாலெக்ஷ்ம்யதீநங்கள் என்று சொன்னுல் பகவானுக்குபாரதீநத்வம் முதலியதுகள் உண்டாகுமே என்கிற சங்கையை ஹேதுவிசேஷத்தாலும் த்ருஷ்டாந்தபலத்தாலும் பரிஹரிக்கிருர் 42

32. "ப்ரசக" இத்யாதி ச்லோகத்தில்— மஹாலெக்ஷ்மியின் ஸ்வரூபகுணங்களையும் திவ்யமங்கள விக்ரஹகுணங்களையும் சொல்லவிரும்பி முதலில் மஹா

லெக்ஷ்மிக்கும் அவனது பர்த்தாவுக்கும் ஸத்ருசங்களான குணங்களை அநுஸந்திக்கிறார். 43

33. "அந்யேபி" இத்யாதி ச்லோகத்தில்— மறுபடியும் பகவானுக்கும் மஹாலெக்ஷ்மிக்கும் ஸத்ருசங்களான குணங்களையே அநுஸந்திக்கிறார். 44

34. "யுவத்வாதன" இத்யாதி ச்லோகத்தில்— மஹாலெக்ஷ்மிக்கும் அவனது பர்த்தாவுக்கும் ஸ்வரூபரூப குணங்கள் ஸத்ருசங்களாய் இருக்குமாகில் ஸேவகர்களுக்கு அவ்விருவர்களையும் பிரித்தரிதல் எவ்விதம் உண்டாகுமென்கிற கேழ்விக்கு ஸமாதானம் சொல்லுகிறார். 45

35. "கநகக" இத்யாதி ச்லோகத்தில்— முன் ச்லோகத்தில் ஸ்வரூபபேதககுணங்களைச் சொல்லிவிட்டபடியால ரூபபேதககுணங்களை இச்சுலோகத்தில் அநுஸந்திக்கிறார். 47

36. "அங்கம் தே" இத்யாதி ச்லோகத்தில்— திருப்பாற்கடலின் ஸாரஸமஷ்டியாக மஹாலெக்ஷ்மியின் திருமேனியை வர்ணித்து கற்பககொடி முதலியவைகளை அதின் அஸாராம்சங்களாக உத்ப்ரேக்ஷித்து அந்த உத்ப்ரேக்ஷையும் திருப்பாற்கடலிலிருந்து ஆவிர்ப்பவித்ததும் அப்ராக்ருதமுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் திருமேனிக்கு சரியாகாதென்கிறார். 48

37. "ப்ரணமத்" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீ மஹாலெக்ஷ்மியின் திருமேனியின் வர்ணநம் வாசாமகோசரமென்கிறார். 50

38. "ஏகபங்யஞ்ச்ய" இத்யாதி ச்லோகத்தில்—ஸ்ரீமஹா லெக்ஷ்மியினுடைய ஆச்ரிதாநுகூலஸாம்ராஜ்யஸூசகமாக வீற்றிருத்தலின் விசேஷத்தை அநுசந்திக்கிறார். 51

39. "ஸௌரபித" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீமஹா லெக்ஷ்மியின் ஸேவையாலுண்டான ப்ரீதியினால் அவனது திருவடிகளை சரணம் புகுருகிறார். 52

40. "த்வத்ஸ்வீகார" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீ மஹாலெக்ஷ்மியின் கடாக்ஷவிக்ரஹவைலக்ஷண்யத்தை அநுஸந்திக்கிறார். 54

41. "ஆநந்தாத்மபி:" இத்யாதி ச்லோகத்தில்—மறுபடியும் ஸ்ரீமஹாலெக்ஷ்மியின் கடாக்ஷங்களையே வர்ணித்துக்கொண்டு அவைகளால் தன் ரக்ஷணத்தை ப்ரார்த்திக்கிறார். 55

42. "பாதாருந்துதம்" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீ மஹாலெக்ஷ்மியின் ஸௌகுமார்யத்தை அநுஸந்திக்கிறார் 57

43. "ஆமர்யாதம்" இத்யாதி ச்லோகத்தில்—ஸ்ரீமஹா லெக்ஷ்மியின் தாருண்யத்தை வர்ணிக்கிறார் 58

44. "ஆமோதாத்புத" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீ மஹாலெக்ஷ்மியின் திருமேனியை புஷ்பமாலையாக வர்ணித்து அது ஸ்ரீமஹாவிஷ்ணுவின் திருமார்புக்கு அலங்காரமாகிறது என்று சொல்லி ஸௌகுமாரதமமான அத்திருமேனியை ஸௌகுமாரமான புஷ்பமாலையாக வர்ணித்த தன்னை நிந்தித்துக்கொள்கிறார். 60

45. "மர்மஸ்ப்ருச:" இத்யாதி ச்லோகத்தில்—ஸ்ரீ மஹா லெக்ஷ்மிக்கு பகவானுடன் கூடிய சம்போக ச்ருங்காரத்தை வர்ணிக்கிறார் 62

46. "கநகரசநா" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீ மகா லெக்ஷ்மிக்கு திருவாபரணஸமூஹங்களின் சேர்க்கையால் உண்டாகிய காந்திவிசேஷத்தை அநுசந்திக்கிறார் 63

47. "ஸாபாங்ய" இத்யாதி ச்லோகத்தில்—பகவானோடு பரமஸாம்யாபந்நையான ஸ்ரீ மஹாலெக்ஷ்மிக்கு கௌஸ்துபம் வைஜயந்தீ பஞ்சாயுதங்கள் இவைகளின் தாரணமும் உண்டாகவேண்டியிருக்க அவைகளை பகவான் மட்டில் தரிப்பதற்குக் காரணத்தை உத்ப்ரேக்ஷிக்கிறார் 64

48. "யதிமநுஜ" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீ மஹா லெக்ஷ்மியானவள் பகவானுடைய அந்த அந்த அவதாரத்துக்கு அநுகுணமாக அவதரியாமல்போனால் பகவானுக்கு அந்த அவதாரலீலை ருசியாது என்கிறார் 65

49. "ஸ்கலிதகடக" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீ மஹாலெக்ஷ்மியைப் பார்த்து ஆச்ரிதர்களுக்காக சமுத்ரமதநம் பண்ணின பகவானுடைய ச்ரமாபநோதநத்திற்காக நீர் சமுத்ரத்திலிருந்து ஆவிர்ப்பவித்தீர் என்கிறார் 66

50. "மாதர்மைதிலி" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய பொறுமையைவிட ஸ்ரீ மஹாலெக்ஷ்மியின் பொறுமையே விசேஷித்தது

என்று சொல்லி அந்த அவனது பொருமை மஹாபராதிகளான நம்மை ஆநந்திப்பிவிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறார் 67

51. "மாதர்லக்ஷ்மி" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீ மஹாலெக்ஷ்மியின் ஸம்பந்தம் பகவானுக்கு இருப்பதனால்தான் பகவான் தமக்கு உத்தேச்யராகிறார் என்றும் பகவானுடைய தர்சந ஆச்ரயணகைங்கர்யகாணங்களும் அவைகளால் உண்டாகிய ஆநந்த பாஷ்பாதிகளும் தமக்கு உபபந்நமாகிறதுகள் என்றும் சொல்லுகிறார். 69

52. "பிதேவ" இத்யாதி ச்லோகத்தில்— குளிர்ந்த திருவுள்ளமுள்ள பகவான் மஹாபராதங்களை இடைவிடாது செய்திருக்கிற ஜநங்களைப்பார்த்துச் சீறுவாராகில் அச்சீற்றத்தை உபதேசாதிகளாலே மாற்றி அபராதிஜநங்களை ஸ்ரீமஹாலெக்ஷ்மீ தம் ஆ[illegible]மாக ஆக்கிக்கொள்கிறாள் என்கிறார். 70

53. "நேதுர்நித்யஸஹாயிநீ" இத்யாதி ச்லோகத்தில்— ஆச்ரிதஸம்ரக்ஷணத்திற்காக ஸ்ரீமஹாலெக்ஷ்மியும் அவளது பர்த்தாவும் எந்த க்ருபாஸ்வாதந்த்ர்யகுணங்களால் துக்ககரமான இருள்தருமாஞாலத்தில் அவதரித்து ஸௌகுமாரதரமான தங்கள் திருமேனிகளை வருத்தி விரஹக்லேசம் முதலியவைகளை அநுபவித்தார்களோ அந்த க்ருபாஸ்வாதந்த்ர்யங்களை நிந்திக்கவேண்டுமென்று அவர்களுடைய திருமேனிகளிலுள்ள ப்ரேமபாரவச்யத்தினால் சொல்லுகிறார். 72

54. "அதிசயிதவாங்" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீ மஹாலெக்ஷ்மியின் ஆச்ரிதஸம்ச்லேஷ உபயோகியான ஸ்வாதீநபதிகாத்வத்தைச் சொல்லுகிறார். 73

55. "தசசதபாணி" இத்யாதி ச்லோகத்தில்—பகவானுடைய ஸர்வப்ரகாரவிபவமும் ஸ்ரீமஹாலெக்ஷ்மியினுடைய விலாஸலவாநுபவத்தில் பர்யாப்தமாகாது என்று சொல்லுகிறார். 75

56. "ஜநநபவந" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீமஹாலெக்ஷ்மியானவள் திருப்பாற்கடலிலும் பரமபதத்திலும் ஸ்ரீரங்கத்திலும் நித்யவாஸம் செய்வதற்கு ஹேதுவைச் சொல்லுகிறார். 76

57. "ஔதார்ய" இத்யாதி ச்லோகத்தில்— ஸ்ரீமஹாலெக்ஷ்மிக்கு ஸர்வாவதாரங்களைவிட ஸ்ரீரங்கத்திலுள்ள அர்ச்சாவதாரத்தில் ஸர்வகுணங்களும் அதிசயிதங்களென்கிறார். 77

58. "ஐச்வர்யம்" இத்யாதி ச்லோகத்தில்— வாங்மநஸ்ஸுக்களுக்கெட்டாததான ஸ்ரீமஹாலெக்ஷ்மியின் ஔதார்யத்தை வர்ணிக்கிறார். 78

59. "ஜ்ஞாநக்ரியா" இத்யாதி ச்லோகத்தில்— தனது நைச்யத்தை அநுஸந்திக்கிறார். 79

60. "இத்யுக்திகைதவசதேந" இத்யாதி ச்லோகத்தில்— கீழ் தான் சொன்ன நைச்யமும் பூர்வாசார்யர்கள் செய்த நைச்யத்தை அநுகரித்ததேயொழிய மந:பூர்வகமன்றாகையால் நிர்ஹேதுக க்ருபையாலேயே ஸ்ரீமஹாலெக்ஷ்மீ தனக்கு சரணமாயிருக்கிறாள் என்கிறார். 80

81. "ஸ்ரீரங்கே" இத்யாதி ச்லோகத்தில்— த்ருஷ்டாத்ருஷ்டங்களென்கிற இருவகைப் பலன்களையும் ஸ்ரீ மஹாலக்ஷ்மிமுகமாய் ப்ரார்த்தித்துக்கொண்டு ஸ்தோத்ரத்தை முடிவுசெய்கிறார். 81

விஷயஸூசிகை முற்றிற்று.

ஸ்ரீ:

॥ ஶ்ரியை நம: ॥

॥ ஶ்ரீமதே ராமாநுஜாய நம: ॥

ஸ்ரீகுணரத்நகோசம்

பட்டர் தனியன்.

ஶ்ரீபராஶரப⁴ட்டார்ய: ஶ்ரீரங்கே³ஶபுரோஹித:
ஶ்ரீவத்ஸாங்கஸுத: ஶ்ரீமாந் ஶ்ரேயஸே மேऽஸ்து பூ⁴யஸே ॥

ஸ்ரீபராசரபட்டார்ய: ஸ்ரீரங்கேசபுரோஹித:.
ஸ்ரீவத்ஸாங்கஸுத: ச்ரீமாந் ச்ரேயஸே மேஸ்து பூயஸே.

வ்யாக்யாநச்லோகம்.

யத்³வா ஶ்ரீரங்க³ராஜஸ்ய மஹிஷீம் ஸ்ம்ருதயே ஸதா³
ஶ்ரீதே³வ்யா கு³ணரத்நாநாம் கோஶஸ்ய விவ்ருதி: க்ருதா ॥
த்³ராவிட்³யா பா⁴ஷயா ஸத்³பி⁴: க்ருதா வாக்யேந யோஜிதா
வ்யாக்²யாநம் ஸம்ப்ரதா³யாய க்ரியதே ச ஶ்ரியோ முதே³ ॥

28 AUG 1924

ஸ்தோத்ராரம்பச்லோகம்.

𑌶𑍍𑌰𑌿𑌯𑍈 𑌸𑌮𑌸𑍍𑌤𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌨𑌵𑍍𑌯𑌸𑌨𑌂 𑌹𑌰𑍇𑌃 ।
𑌅𑌙𑍍𑌗𑍀𑌕𑌾𑌰𑌿𑌭𑌿𑌰𑌾𑌲𑍋𑌕𑍈𑌃 𑌸𑌾𑌰𑍍𑌥𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑍈
𑌕𑍃𑌤𑍋𑌽𑌞𑍍𑌜𑌲𑌿𑌃 ॥ க ॥

ச்ரியை ஸமஸ்தசிதசித்விதானவ்யஸநம் ஹரே: —
அங்கீகாரிபிராலோகைஸ்ஸார்த்தயந்த்யை க்ருதோ
ஞ்ஜலி: க

[பதவுரை] ஹரே: - மஹாவிஷ்ணுவினுடைய; ஸமஸ்த சிதசித்விதாநவ்யஸநம் — எல்லா சேதனுசேதனங்களின் ஸ்ருஷ்டியில் உண்டான ஆயாஸத்தை; அங்கீகாரிபி: — அங்கீகரிக்கிறதுகளான; ஆலோகை: — கடாக்ஷங்களினுல்; ஸார்த்தயந்த்யை - ஸபலமாகச்செய்கிறவளான; ச்ரியை - லெக்ஷ்மியின்பொருட்டு; அஞ்ஜலி: - கைகூப்புதலானது; க்ருத: - (என்னுல் செய்யப்பட்டது (க).

[கருத்துரை] ஆசிரிதபாபஹரரான ஸ்ரீ மஹாவிஷ்ணுவினது ஸமஸ்த சேதநாசேதநங்களின் ஸ்ருஷ்டியிலுண்டான ஆயாஸத்தை கடாக்ஷங்களினுல் அங்கீகரித்து ஸபலமாகச் செய்கிறவளும், எல்லாராலும் ஆச்ரயிக்கப்படுவதாலும் தான் எம்பெருமானே ஆச்ரயிப்பதாலும் ஸ்ரீ என்கிற திருநாமத்தையுடையவளுமான பெரிய பிராட்டியின் பொருட்டு என்னுல் அஞ்ஜலி பண்ணப்பட்டது.

𑌉𑌲𑍍𑌲𑌾𑌸𑌪𑌲𑍍𑌲𑌵𑌿𑌤𑌪𑌾𑌲𑌿𑌤𑌸𑌪𑍍𑌤𑌲𑍋𑌕𑍀
𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌹𑌕𑍋𑌰𑌕𑌿𑌤𑌨𑍇𑌮𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌲𑍀𑌲𑌾𑌮𑍍 ।

𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌤𑌲𑌮𑌙𑍍𑌗𑌲𑌦𑍀𑌪𑌰𑍇𑌖𑌾𑌂

𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌰𑌾𑌜𑌮𑌹𑌿𑌷𑍀𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃 ॥ ௨ ॥

உல்லாஸபல்லவிதபாலிதஸப்தலோகீ நிர்வாஹகோரகிதநேமகடாக்ஷலீலாம்—ஸ்ரீரங்கஹர்ம்யதலமங்களதீபரேகாம் ஸ்ரீரங்கராஜமஹிஷீம் ச்ரியமாச்ரயாம: ௨

[ப—௨] (ஸப்தலோக்யா:) – ஏழு உலகங்களுடைய; உல்லாஸ, பல்லவித, பாலித, ஸப்த, லோகீ, நிர்வாஹ, கோரகித, நேம, கடாக்ஷ, லீலாம் - உதயத்தினால், தளிர்த்தும், ரக்ஷிக்கப்பட்ட, ஏழு, உலகங்களுடைய, ஸ்திதியினால், மொட்டிட்டிருக்கிற, அர்த்த, வீக்ஷணத்தின், விலாஸத்தையுடையவளாயும்; ஸ்ரீரங்கஹர்ம்யதல, மங்கள, தீபரேகாம்- ஸ்ரீரங்கமென்கிற, விமானப்ரதேசத்துக்கு, சோபனமான, தீபகலிகையாயும்; ஸ்ரீரங்கராஜ, மஹிஷீம் - ஸ்ரீரங்கனாதனுடைய பட்டமஹிஷியாயும் இருக்கிற; ச்ரியம் - லக்ஷ்மியை; ஆச்ரயாம: - ஆச்ரயிக்கிறோம் (௨).

[க—௨] ஏழு உலகங்களின் உதயத்தால் தளிர்த்தும் அவைகளின் ரக்ஷணத்தால் மொட்டிட்டிருக்கிறதான தனது அர்த்தகடாக்ஷவிலாஸத்தையுடையவளும் ச்ரீரங்கவிமானத்திற்கு மங்களதீபகலிகையும் ச்ரீரங்கநாதனது பட்டமஹிஷியுமான பெரிய பிராட்டியை ஆச்ரயிக்கிறோம்.

[illegible]

[illegible] ।

[illegible]

[illegible] 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍 ॥ ௩ ॥

அநுகலதநுகாண்டாலிங்கநாரம்பசும்பத்ப்ரதிதிசபுஜ
சாகஸ்ரீஸகாநோகஹர்த்தி: — ஸ்தநநயனகுளுச்சஸ்பார
புஷ்பத்விரேபா ரசயது மயி லக்ஷ்மீகல்பவல்லீகடா
க்ஷாந் ௩

[ப—உ] அநுகல, தநுகாண்ட, ஆலிங்கந, ஆரம்ப
சும்பத், ப்ரதிதிச, புஜசாக, ச்ரீசகாநோகஹ, ருத்தி: -க்ஷணம்
தோறும், கொப்புபோன்ற சரீரத்தினுடைய, ஆலிங்கநத்தின்
ஆரம்பத்தினால், ப்ரகாசிக்கின்றதான, நான்குதிக்குகளிலு
முள்ள, கிளைகள்போன்ற திருத்தோள்களையுடைய, மரம்போ
ன்ற ச்ரீகாந்தனது, குணசம்பத்துக்களையுடையவளும் ; ஸ்தந
நயநகுளுச்சஸ்பாரபுஷ்பத்விரேபா - குளுச்சங்க ளென்கிற
பூங்கொத்துக்கள்போன்ற ஸ்தநங்களையும், ஸ்பாரபுஷ்பங்க
ளென்கிற மலர்ந்த புஷ்பங்களிலுள்ள த்விரேபங்களென்கிற
வண்டுகள்போன்ற திருக்கண்களையும் உடையவளுமான ; லக்ஷ்
மீகல்பவல்லீ - கற்பக்கொடிபோன்ற லக்ஷ்மியானவள் ; மயி -
என்னிடத்தில் ; கடாக்ஷாந் - கடாக்ஷங்களை ; ரசயது - பண்
ணட்டும்.

[க—உ] கொப்புபோன்ற சரீரத்தினுடைய ஆலிங்க
நத்தின் ஆரம்பத்தினால் அடிக்கடி பிரகாசிக்கிறதான நான்கு
திக்குகளிலுமுள்ள கிளைகள்போன்ற நான்கு திருத்தோள்க
ளையுடைய மரம்போன்ற ச்ரீகாந்தனது குணஸம்பத்துக்களை
யுடையவளும் பூங்கொத்துக்கள்போன்ற திருமுலைத்தடங்க
ளையும் மலர்ந்த பூக்களிலுள்ள வண்டுகள் போன்ற திருக்கண்
களையுமுடையவளுமான கற்பக்கொடிபோன்ற பெரிய பிரா
ட்டி என்னிடத்தில் தனது கடாக்ஷங்களைச்செய்யட்டும்.

𑌯𑌦𑍍𑌭𑍍𑌰𑍂𑌭𑌙𑍍𑌗𑌾𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌸𑍍𑌥𑌿𑌰𑌚𑌰𑌰𑌚𑌨𑌾𑌤𑌾𑌰𑌤𑌮𑍍-
𑌯𑍇 𑌮𑍁𑌰𑌾𑌰𑍇𑌰𑍍𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌂 𑌮𑍁𑌰𑌭𑌿𑌦𑍁𑌰-
𑌸𑌿 𑌯𑌤𑍍𑌪𑌾𑌦𑌚𑌿𑌹𑍍𑌨𑍈𑌸𑍍𑌤𑌰𑌨𑍍𑌤𑌿 । 𑌭𑍋𑌗𑍋𑌪𑍋𑌦𑍍𑌘𑌾𑌤-
𑌕𑍇𑌲𑍀𑌚𑍁𑌲𑍁𑌕𑌿𑌤𑌭𑌗𑌵𑌦𑍍𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑍍𑌯𑌾𑌨𑍁𑌭𑌾-
𑌵𑌾 𑌸𑌾 𑌨𑌃 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌸𑍍𑌤𑍃𑌣𑍀𑌤𑌾𑌮𑌮𑍃𑌤𑌲𑌹𑌰𑍀𑌧𑍀𑌲𑌙𑍍𑌘𑌨𑍀-
𑌯𑍈𑌰𑌪𑌾𑌙𑍍𑌗𑍈𑌃 ॥ ௪ ॥

யத்ப்ரூபங்கா: ப்ரமாணம் ஸ்திரசரரசநாதாரதம்யே முராரேர்வேதாந்தாஸ்தத்வசிந்தாம் முரபிதுரஸி யத் பாதசிந்ஹைஸ்தரந்தி—போகோபோத்காதகேளீசுளுகிதபகவத்வைச்வரூப்யாநுபாவா ஸா ந: ஸ்ரீராஸ்த்ருணீதாமம்ருதலஹரிதீலங்கநீயைரபாங்கை: ௪

[ப—உ] முராரே: - ச்ரீமஹாவிஷ்ணுவினுடைய; ஸ்திர, சர, ரசநா, தாரதம்யே - ஸ்தாவர, ஜங்கமங்களுடைய, ஸ்ருஷ்டியின், தாரதம்யத்தில்; யத் ப்ரூபங்கா: - எந்த லக்ஷ்மியின் புருவ அசைத்தல்கள்; ப்ரமாணம் - நியாமகங்களோ; வேதாந்தா:-உபநிஷத்துக்கள்; தத்வசிந்தாம் - பரதத்வவிஷயமான ஸம்சயத்தை; முரபித உரஸி - மஹாவிஷ்ணுவின் திருமார்பில்; (உள்ள) யத், பாத, சிந்ஹை:-எந்த லக்ஷ்மியின் திருவடிகளினுடைய, அடையாளங்களால்; தரந்தி - போக்கடிக்கிறதுகளோ; போக, உபோத்காத, கேளீ, சுளுகித, பகவத், வைச்வரூப்ய அநுபாவா - போகத்தின், ஆரம்பத்தில் விளையாட்டிலேயே, அல்பமாகச் செய்யப்பட்டதான பகவானுடைய, விசுவரூபத்தன்மையின் மாஹாத்ம்யத்தையுடையவளான; ஸா - அந்த; ச்ரீ: - லக்ஷ்மி; அம்ருத, லஹரி, தீ, லங்கநீயை: - அமிருதத்தின், ப்ரவாஹத்தினுடைய, புத்தியினுலே

அடையத்தகுந்ததுகளான; அபாங்கை: -கடாக்ஷங்களாலே; ந: - நம்மை; ஆஸத்ருணீதாம் - மறைக்கட்டும்.

[க—உ]. முரத்வம்ஸியான ச்ரீமஹாவிஷ்ணுவினுடைய ஸ்தாவரஜங்கமங்களின் ஸ்ருஷ்டிவைஷம்யத்தில் எவளது புருவநெரித்தல்கள் நியாமகங்களோ உபநிஷத்துக்கள் பரதத்வவிஷயமான ஸம்சயத்தை ச்ரீமஹாவிஷ்ணுவினது திருமார்பிலுள்ள எவளது திருவடிச்செம்பஞ்சிக்குழம்புகளின் அடையாளங்களால் நிவர்த்தித்துக்கொள்ளுகிறதுகளோ போகாரம்பத்தில் ஆயாசமில்லாமலே அல்பமாகச் செய்யப்பட்ட பகவத்வைச்வரூப்யமாஹாத்ம்யத்தையுடைய அந்த பெரிய பிராட்டி தனது "இவைகள் அமிருதப்ரவாஹங்கள்" என்கிற புத்திஜநகங்களான கடாக்ஷங்களால் நம்மைக் கடாக்ஷிக்கட்டும்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

யத்யாவத்தவ வைபவம் தததிதஸ்தோத்ராய தாரே ஸ்ப்ருஹா ஸ்தோதும் தே வயமித்யதஸ்ச ஜக்ருஹு: ப்ராஞ்சோவிரிஞ்சாதய:—அப்யேவம் தவ தேவிவாங்மநஸயோர்பாஷாந்நபிஞ்ஜும் பதம் காவாச: ப்ரயதாமஹே கவயிதும் ஸ்வஸ்தி ப்ரசஸ்த்யை கிராம் ௫

[ப—உ]. ஹே தேவி - ச்ரீரங்கநாயகியே! தவ - உம்மு

டைய; வைபவம் - மாஹாத்ம்யமானது; யத் -எவ்வித ஸ்வரூபமுள்ளதோ; யாவத் - எவ்வளவு ப்ரமாணத்தையுடையதோ; தத், உசித, ஸ்தோத்ராய - அதற்குத்தகுந்த ஸ்தோத்ரத்தைச் செய்வதின்பொருட்டு; ஸ்ப்ருஹா -இச்சையானது; தூரே - வெகு தூரத்தில்; ப்ராஞ்ச:-மூதோர்களான; விரிஞ்சாதய: ச-பிரம்மாமுதலியவர்களும்; வயம் - நாங்கள்; அத: - இந்த மாஹாத்ம்யத்தை; ஸ்தோதும்-ஸ்தோத்ரம் செய்வதற்கு; கே-எவ்வளவு சக்தியுள்ளவர்கள்; இதி - என்கிற இந்த வார்த்தையையே; ஜக்ருஹு: - கிரகித்தார்கள் ; அப்யேவம்-இப்படியிருந்தாலும்; வாங்மனஸயோ:-வாக் மனஸ்ஸுக்களுடைய; பாஷாணம் அதிஜஜ்ஞும் - பாஷணத்தை, அறியாத; தவ - உம்முடைய; பதம் - ஸ்வரூபத்தை; ஸ்தவிதும் - ஸ்தோத்ரம்செய்வதற்கு ; ஜாவாச: -நிந்திக்கப்பட்டவாக்குக்களையுடைய; (நாங்கள்) ப்ரயதாமஹே - மிக முயற்சி செய்கிறோம்; கிராம் - ஸ்தோத்ர வாக்யங்களின்; ப்ரசஸ்த்யை - ப்ரஸித்தியின்பொருட்டு; ஸ்வஸ்தி - மங்களமானது; ஸ்யாத் - உண்டாகட்டும்.

[க—உ] ஏ ச்ரீரங்கநாயகியே உமது வைபவம் எவ்வித ஸ்வரூபத்தையுடையதோ எவ்வளவோ அவைகளுக்கு அநுரூபமாக ஸ்தோத்ரம் செய்வதற்கு இச்சையே எட்டாத வெகு தூரத்திலிருக்கிறது. முன்னோர்களாகிய ப்ரம்மாதிகளும் "அல்பபுத்திகளாகிய நாங்கள் இந்த மாஹாத்ம்யத்தை ஸ்தோத்ரம் செய்வதற்கு சக்தியுள்ளவர்களல்ல" என்கிற இந்த வார்த்தையையே கிருஹித்தார்கள். இப்படியிருந்தாலும் வாங்மநஸ் சப்தத்தையே அறியாத உமது ஸ்வரூபத்தை ஸ்துதிப்பதற்கு நிந்த்யவாக்குக்களான நாங்கள் மிக முயலுகிறோம்; ஸ்துதிவார்த்தைகளின் ப்ரஸித்திக்கு மங்களம் உண்டாக வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்.

𑌸𑍍𑌤𑍋𑌤𑌾𑌰𑌂 𑌤𑌮𑍁𑌶𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵𑌿 𑌕𑌵𑌯𑍋𑌯𑍋𑌵𑌿𑌸𑍍𑌤𑍃
𑌣𑍀𑌤𑍇 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 𑌸𑍍𑌤𑍋𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑌤𑌶𑍍𑌚 𑌤𑍇
𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌰𑌾𑌮𑌯𑍍𑌯𑍇𑌵 𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌤𑌿 | 𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑌸𑍍𑌮𑌦𑌮𑌰𑍍𑌷-
𑌣𑍀𑌯𑌭𑌣𑌿𑌤𑌿𑌸𑍍𑌵𑍀𑌕𑌾𑌰𑌤𑌸𑍍𑌤𑍇 𑌗𑍁𑌣𑌾𑌃 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑍌𑌦𑌾
𑌰𑍍𑌯𑌦𑌯𑌾𑌦𑌯𑍋 𑌭𑌗𑌵𑌤𑌿 𑌸𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍍𑌨𑍁𑌵𑍀𑌰𑌨𑍍 𑌪𑍍𑌰-
𑌥𑌾𑌂 || ௬ ||

ஸ்தோதாரம் தமுசந்தி தேவி கவயோயோவிஸ்த்ரு
ணீதே குணாந் ஸ்தோதவ்யஸ்ய ததஸ்ச தே ஸ்துதி
ராமய்யேவ விச்ராம்யதி—யஸ்மாதஸ்மதமர்ஷணீய
பணிதிஸ்வீகாரதஸ்தே குணா: க்ஷாந்த்யௌதார்யத
யாதயோ பகவதி ஸ்வாம் ப்ரஸ்நுவீரந் ப்ரதாம் ௬

[ப—உ] ஸ்தோதவ்யஸ்ய - ஸ்தோத்ரம் செய்யத்தகுந்தவனுடைய; குணாந்- குணங்களை; ய:- எவன்; விஸ்த்ருணீதே - விஸ்தாரப்படுத்துகிறானோ; தம் - அவனை; கவய: - பண்டிதர்கள்; ஸ்தோதாரம் – ஸ்தோத்ரம் செய்பவனாக; உசந்தி - சொல்லுகிறார்கள். (ஆகையால்) யஸ்மாத்- எந்தக்காரணத்தினால்; அஸ்மதமர்ஷணீய, பணிதி ஸ்வீகாரத: - என்னுடைய ஸஹிக்கவொண்ணாத, வாக்குக்களின் அங்கீகாரத்தினால்;தே - உம்முடைய; க்ஷாந்தி, ஔதார்ய, தயா ஆதய: - பொறுமை, நற்கொடை, தயை இவைகளை முதலாகவுடைய; குணா: - குணங்கள்; ஸ்வாம்- தங்களதான; ப்ரதாம் -பிரஸித்தியை; அல்லது பிரகாசத்தை; ப்ரஸ்நுவீரந் - உண்டுபண்ணுங்களோ; ததச்ச-அந்தக்காரணத்தினால்; தேவி- ஏ தேவியே; தே - உம்முடைய; ஸ்துதிரா- ஸ்தோத்திரபாரமானது; மய்யேவ - என்னிடத்திலேயே; விச்ராம்யதி - பர்யவஸிக்கிறது.

[க—உ] ஏ தேவியே! உலகத்தில் ஸ்தோத்ரம் செய்யத்தக்கவன் குணங்களை எவன் விஸ்தாரப்படுத்துகிறானோ அவனை ஸ்தோத்திரம் செய்கிறவன் என்று பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் ஸ்தோத்திரம் செய்தலாகிற பாரமானது என்னிடத்திலேயே நிலைக்கிறது. ஏனெனில் எனது கடினமான வாக்குக்களை நீர் த்யஜிக்கவேண்டியிருக்க ஸ்தோத்ரமாக அங்கீகரித்திருக்கிறபடியால் உம்முடைய பொருமை முதலிய குணங்கள் விஸ்தாரத்தையடைகிறதல்லவா அந்தக் காரணத்தினால்தான்.

𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌂 𑌸𑌮𑌗𑍍𑌰𑌯𑌤𑍁 𑌨𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌃 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗-
𑌰𑌾𑌜𑌮𑌹𑌿𑌷𑍀 𑌮𑌧𑍁𑌰𑍈𑌃 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍈𑌃 । 𑌵𑍈𑌦𑌗𑍍𑌧𑍍𑌯𑌵𑌰𑍍-
𑌣𑌗𑍁𑌣𑌗𑍁𑌮𑍍𑌫𑌨𑌗𑍌𑌰𑌵𑍈𑌰𑍍𑌯𑌾𑌂 𑌕𑌣𑍍𑌡𑍂𑌲𑌕𑌰𑍍𑌣-
𑌕𑍁𑌹𑌰𑌾𑌃 𑌕𑌵𑌯𑍋 𑌧𑌯𑌨𑍍𑌤𑌿 ॥ எ ॥

ஸூக்திம் ஸமக்ரயது ந: ஸ்வயமேவ லக்ஷ்மீ: ஸ்ரீரங்கராஜமஹிஷீ மதுரை:கடாக்ஷை: - வைதக்த்ய வர்ண குணகும்பன கௌரவைர்யாம் கண்டூலகர்ணகுஹரா: கவயோ தயந்தி எ

[ப—உ]. ஸ்ரீரங்கராஜமஹிஷீ - ஸ்ரீரங்கராஜனுக்குப் பட்டமஹிஷியான; லக்ஷ்மீ:-லக்ஷ்மீதேவியானவள்; மதுரை: - மதுரங்களான; கடாக்ஷை: - கடாக்ஷங்களாலே; ந: - நம்முடைய; ஸூக்திம்-சோபனவாக்கை; ஸ்வயமேவ - தானாகவே; ஸமக்ரயது - குணபூர்ணையாகச்செய்யட்டும். யாம் - எந்த வாக்கை; வைதக்த்ய, வர்ண, குண, கும்பந, கௌரவை: - சாதுர்யத்தினால், அக்ஷரங்களுடைய, ஒஜஸ், ப்ரஸாதம், சய்யா, பாகம் முதலிய குணங்களினுடைய, சேர்க்கையின், அதிச

யங்களினுல்; அல்லது அர்த்தகல்பனம், ப்ரஸாதமாதுர்யாதி அக்ஷரசர்மங்கள் இவைகளின், ரசனையின் அதிசயங்களினுல்; கவய: - பண்டிதர்கள்; கண்டேல, கர்ணகுஹரா: ஸந்த: - தினை வையுடைய காதுகளின் துளைகளையுடையவர்களாய்க்கொண்டு; தயந்தி -பானம் பண்ணுகிறுர்களோ; (தாம்) அவ்விதமான வாக்காக; ஸமக்ரயது -என்றதோடு அந்வயம் கண்டுகொள்வது.

[க—உ] எந்த வாக்கை சாதுர்யத்தினுல் அக்ஷரங்களின் ஓஜஸ், ப்ரஸாதம் சய்யா பாகம் என்கிற குணங்களின் சேர்க்கையின் அதிசயங்களினுல் அல்லது அர்த்தகல்பனம், ப்ரஸாத மாதுர்யாத்யக்ஷரகுணங்களிவைகளின் ரசனையின் அதிசயங்களினுல் கவிகள் ஆசையுள்ள காதுகளையுடையவர்களாய்க்கொண்டு எப்போதும் கேட்க ப்ரியப்படுவார்களோ அவ்வித குணங்களால் பரிபூர்ணமாக ச்ரீரங்கராஜமஹிஷி தானே நமது வாக்கைச்செய்யவேண்டும் என்று ப்ரார்த்தனை

கநாவ்ராதாவஜ்ரம் வஹ்மண வர்ணாஹி ஓந-
வொடஹாநம் வளஹாஜம் வரிஹிதவிவாயாவி
மஹநி। வஷாநாம் வளஹாதரஜநிஷெமிஷெ-
வஜ்ரம் ஶ்ர வணவொஷவெவ ஶ்ரீ ஹரம் வஹவைய
வாணீவிஷவிதஷி ॥ அ ॥

அனுக்ராதாவசயம் பஹுகுணபரீஹாஹி மநஸோ தாஹாநம் ஸௌஹார்த்தம் பரிசிதயிவாதாபி கஹநம் பதாநாம் ஸௌப்ராத்ராதநிமிஷநிஷேவ்யம் ச்ரவண யோஸ்த்வமேவ ஸ்ரீர்மஹ்யம் பஹுமுகயவாணீ விலஸிதம் அ

[ப—உ]. ஹே ஸ்ரீ: - ஏ லக்ஷ்மீதேவியே! ; அநாக்

ராத, அவத்யம் - தொடப்படாத, குற்றங்களையுடையதாயும்; பஹு, குண, பரிணதி - வெகுவிதங்களான, பாகவ்ருத்தி முதலிய குணங்களின், விஸ்தாரத்தையுடையதாயும்; மநஸ: - மனதுக்கு; ஸௌஹார்தம் - சந்தோஷத்தை; தஹநம் - தறக்கிறதாயும்; பரிசிதமிவஸ்திதம் - பரிசயம் பண்ணப்பட்டதுபோலிருப்பதாயும்; அதாபி - அப்படியிருந்தாலும்; கஹநம் - அறியமுடியாததாயும்; பதாநாம் - பதங்களுடைய; ஸௌப்ராத்ராத் - ஸ்நேஹத்தினால்; ச்ரவணயோ: - காதுகளுக்கு; அநிமிஷ, நிஷேவ்யம் - அவதானத்தோடுகூடியிருக்கும்படி, ஸேவிக்கத் தகுந்ததாயும் (இருக்கிற); வாணீ, விலஸிதம் - ஸரஸ்வதியின், விலாஸத்தை; த்வமேவ - நீர்தானே; மஹ்யம் - எனக்கு; பஹுமுகய - வெகுமுகமாகப் பரவச்செய்யவேணும்.

[க—உ]. ஹே லக்ஷ்மியே! நீர்தானே எனக்குக் குற்றமற்றதும், பாகம் வ்ருத்தி முதலிய வெகு குணங்களையுடையதும், கேட்பவர்களின் மனதுக்கு ஸந்தோஷத்தைக் கொடுப்பதும், பரிசயம் பண்ணப்பட்டதுபோலிருக்கச் செய்தேயும் அறியமுடியாததும், பதங்களின் சேர்க்கையால் ஆதரத்துடன் கேழ்க்கக்கூடியதுமான வாக்விலாஸத்தை வெகுமுகமாக விஸ்தாரப்படுத்தவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

ஸ்ரீயஃ ஸ்ரீஃ ஸ்ரீமதம்ருதமய தவ வஹந்நப்ருதா நவம் வதீம் ஸ்ரீயம் ஸுவித்தா வஸுமதீசுவரீயதி ஹ ஹணாஃ ஸ்ருணு தாராஸ்ரயதோ ஹ யாஸ்ரம ஸுஸவ- தாமதேதா ஸ்ரவணதஃ வ நஹேஷிதக்ஷ- ஷிக்ஷா ஸூ டதே ஸஜயோஃ கம்வகுஸதீ ॥ கூ ॥

ச்ரிய: ஸ்ரீ: ஸ்ரீரங்கேசய தவ ச ஹ்ருத்யாம் பகவதீம்
ச்ரியம் த்வத்தோ ப்யுச்சைர்வயமிஹ பணாம: ச்ருணுத
ராம்—த்ருசௌ தே பூயாஸ்தாம் ஸுகதரளதாரே ச்ர
வணத: புநர் ஹர்ஷோத்கர்ஷாத் ஸ்புடந்து புஜயோ: கஞ்
சுகசதம்

[ப—உ]. ச்ரிய: - எல்லாராலும்; ஆச்ரயிக்கத்தக்க பெரிய பிராட்டிக்கும்; ச்ரீ: - ஆச்ரயித்தக்கவரான; ச்ரீரங்கேசய - ஸ்ரீரங்கமென்கிற திவ்யதேசத்தில் சயநம் செய்பவரே; தவ ச - உமக்கும்; ஹ்ருத்யாம் - போக்யையும், திருமார்பில் வஸிப்பவளும்; பகவதீம் - ஞானசக்தி முதலிய ஆறு குணங்களையுடையவளுமான; ச்ரியம் - புருஷகாரமாக எங்களால் ஆச்ரயிக்கத்தக்க பெரியபிராட்டியை; த்வத்தோபி - உம்மைக்காட்டிலும்; உச்சை: - உயர்ந்தவளாக; வயம் - நாங்கள்; இஹ - உமது முன்னிலையில்; பணாம: - ஸ்தோத்ரம் செய்கிறோம்; ச்ருணுதராம் - தேவர் நன்றாய்க் கேழ்க்க வேணும்; ச்ரவணத: - கேழ்ப்பதினால்; தே - உம்முடைய; த்ருசௌ - திருக்கண்கள்; ஸுக, தரள, தாரே - ஸுகத்தினால், அசைகிற கருவிழிகளையுடையதுகளாக; பூயாஸ்தாம் - ஆகட்டும்; புந: - மேலும் (அடிக்கடி); ஹர்ஷோத்கர்ஷாத் - ஸந்தோஷத்தின் ஆதிக்யத்தினால்; புஜயோ: - திருத்தோள்களில்; கஞ்சுகசதம் - அநேக கஞ்சுகங்கள் (சொக்காய்கள்); ஸ்புடந்து - கிழியட்டும்.

[க—உ]. திருவுக்கும் திருவாகிய ஸ்ரீரங்கசாயியே! உமக்கு போக்யையாய் உமது திருமார்பில் வஸிக்கிறவளும் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீர்யம், தேஜஸ் என்கிற ஆறுகுணங்களையுடையவளுமான ஸ்ரீரங்கநாயகியை உம்மைக் காட்டிலும் உயர்ந்தவளாக உமது ப்ரஸாதத்தினால் கிடைத்த

ஞானவான்களாகிய நாங்கள் உமதுமுன் ஸ்தோத்ரம் செய்கி றோம். நீரும் நன்றாய்க்கேளும். கேழ்ப்பீராகில் உமக்கு சந் தோஷமுண்டாகி உமது திருக்கண்கள் ஆநந்தானுபவத்தி னால் அசைகிற கருவிழிகளையுடையதுகளாகும். நீர் எத்தனை சொக்காய்கள் அணிந்தாலும் ஸந்தோஷமிகுதியால் உமது திருத்தோள்கள் பெருத்து அத்தனை சொக்காய்களும் கிழிந்து விடும். ஆகையால் அவ்வளவு ஸந்தோஷத்தை உமக்கு உண் டாக்கவேணுமென்று உமது திவ்யமஹிஷியை ஸ்தோத்ரம் செய்கிறோமென்று கருத்து.

ദേവി ശ്രുതിം ഭഗവതീം പ്രഥമേ പുമാംസസ്ത്വത്സദ്-
ഗുണൌഘമണികോശഗൃഹം ഗൃണന്തി। തദ്ദ്വാരപാ-
ടനപടൂനി ച സേതിഹാസൈസ്തര്ക്കൈസ്സ്മൃതിപു-
രാണപുരസ്സരാണി ॥ ൧൦ ॥

தேவி ச்ருதிம் பகவதீம் ப்ரதமே புமாம்ஸஸ்த்வத்ஸத்
குணௌகமணிகோசக்ருஹம் க்ருணந்தி— தத்வார
பாடனபடூநி ச ஸேதிஹாஸஸம்தர்கணஸ்ம்ருதிபுராண
புரஸ்ஸராணி— ௧௦

[ப—உ]. ஹே தேவி! - ஏ தேவியே; ப்ரதமே - முன்னோர்களான; புமாம்ஸ: - வஸிஷ்டர் வால்மீகி முதலிய பரமர்ஷிகளும் பராங்குசாதி மயர்வறமதிநலமருளப் பெற்ற ஆழ்வாராசார்யகளுமான புருஷர்கள்; பகவதிம் - மாஹாத்ம் யத்தையுடைய; ச்ருதிம் - வேதத்தை; த்வத்ஸத்குணௌக மணிகோசக்ருஹம் - உமது கல்யாணகுணஸமூகங்களாகிற ரத்னராசிகளுக்கு கருவுகலமாகவும்; ஸேதிஹாஸஸந்தர்க்கண ஸ்ம்ருதிபுராணபுரஸ்ஸராணி - இதிஹாஸங்கள் மீமாம்ஸக

ளுடன் கூடிய ஸ்ம்ருதிபுராணம் முதலிய சாஸ்திரங்களை ; தத்த்வாரபாடநபடூநி ச - அந்தக்கருவுகலத்தின் வாசற்கதவு களைத் திறப்பதில் ஸமர்த்தங்களான திறவுகோல்களாகவும்; க்ருணந்தி - சொல்லுகிறார்கள்.

[க—உ]. ஏ தேவியே! முன்னோர்களான வஸிஷ்டர் வால்மீகி, பராசரர், வ்யாஸர் முதலிய பரமரிஷிகளும் மயர்வறமதிநலமருளப்பெற்ற பராங்குசாதியாழ்வார்களும் நாதயாமுனாதி ஆசார்யர்களும் ஸ்வத: ப்ராமாண்யாதிரூபமாஹாத்ம்யத்தையுடைய வேதத்தை உமது கல்யாண குண ஸமூஹங்களாகிற ரத்நக்குவியல்களுக்குக் கருவுகலமாகவும் ஸ்ரீராமாயணம் முதலிய இதிஹாஸங்கள் மீமாம்ஸை இவைகளுடன் கூடிய ஸ்மிருதிபுராணபாஞ்சராத்ராதி சாஸ்திரங்களை அந்தக்கருவுகலத்தின் வாசற்கதவுகளின் திறவுகோல்களாகவும் சொல்லுகிறார்கள்.

ஆஹுர்வேதா நஜா நங்கதிவ நக திவாபாஜகஸவிஷ்வ-
கேதநராஜநமேத்தவிதீஸம் மஹணிநகேவிமஹகேணஸம்
ஷிரிஷ்ர ணகேந ௱ பிக்ஷாவகேந ஸராஜஹவரீதி
வஜலாஜேஸ தலா தலக்ஷாஷபேயகேத ஸ்ரீமஹ-
ஹரேஷ்-பா மணகநகவகேத நக்ஷணமவக்ஷாஸந ॥ கக ॥

ஆஹுர் வேதாநமாநம் கதிசந கதிசா ராஜகம் விச்வமே தத்ராஜந்வத்கேசிதீசம் குணினமபிகுணைஸ்தம் தரித் ராணமந்யே— பிக்ஷாவந்யே ஸராஜம்பவதிதி ச ஜடாஸ்தே தலாதல்யகார்ஷுர்யேதே ஸ்ரீரங்கஹர்ம்யாங்கணாகநகலதே ந க்ஷணம் லக்ஷ்யமாஸந்

[ப—உ]. ஸ்ரீரங்க, ஹர்ம்ய, அங்கண, கநகலதே - ஸ்ரீரங்கத்திலுள்ள, திவ்யவிமானத்தினுடைய, முன்ப்ரதேசத்திற்கு ஸ்வர்ணக்கொடிபோன்றவளே! யே - எவர்கள்; தே - உம்முடைய; லக்ஷ்யம் - கடாக்ஷத்திற்குவிஷயமாக; க்ஷணம் - க்ஷணகாலமும்; நாஸந் - ஆனார்களில்லையோ; ஜடா: - மூடர்களாகிய; தே - அந்த; கதிசந - சிலர்கள்; வேதாந் - வேதங்களை; அமானம் - அப்ரமாணமாகவும்; கதி ச - சிலர்கள்; ஏதத் - இந்த; விச்வம் - ஜகத்தை; அராஜகம் - நாதனற்றதாகவும்; கேசித்; சிலர்கள்; ராஜந்வத் - நல்ல அரசனையுடையதாகவும்; அந்யே - மற்றும் சிலர்கள்; தம் - அந்த; ஈசம் - ஈச்வரனை; குணிநமபி - குணவானாயிருக்கச் செய்தேயும்; குணை: - குணங்களாலே; தரித்ராணம் - சூன்யனாகவும்; அந்யே - மற்றும் சிலர்கள்; பிக்ஷுக - பிச்சைகொள்பவனாகிய கபாலியினிடத்தில்; ஸுராஜம்பவம் - நல்ல ராஜாவாயிருக்கும் தன்மையையும்; ஆஹு: - சொன்னார்கள்; இதி ச - இந்த ப்ரகாரம்' தலாதலி - ஒருவர்க்கொருவர் அறைந்துகொண்டு செய்யும் யுத்தத்தை; அகார்ஷு: - செய்தார்கள்.

[க—உ]. ஸ்ரீரங்கதிவ்யவிமானத்தின் முன்ப்ரதேசத்துக்கு ஸ்வர்ணக்கொடிபோன்றவளே! எவர்கள் உமது கடாக்ஷத்துக்கு க்ஷணகாலமும் இலக்காக ஆகவில்லையோ அந்த மூடர்களில் சிலர்கள் (ஸூகதாதிகள்) வேதங்களை அப்ரமாணமாகவும் சிலர்கள் (காபிலர்கள்) இந்த ஜகத்தை நாதனற்றதாகவும் சிலர்கள் (காணாதர்கள்) நல்ல அரசனையுடையதாகவும் சிலர்கள் (மாயாவாதிகள்) குணவானான அந்த ஈசுவரனை குணஹீனனாகவும் மற்றும் சிலர்கள் (சைவர்கள்) பிச்சைகொள்பவனான கபாலியை ஈசுவரனாகவும் சொல்லிக்கொண்டு ஒருவர்க்கொருவர் உள்ளங்கைகளால் அறைந்து செய்யும் யுத்தத்தைச் செய்தார்கள்.

𑌮𑌨𑌸𑌿 𑌵𑌿𑌲𑌸𑌤𑌾𑌕𑍍𑌷𑍍𑌣𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌵𑌿𑌤𑍍𑌤𑌾𑌞𑍍𑌜𑌨𑌨 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌿𑌰𑌸𑌿 𑌨𑌿𑌗𑍂𑌢𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌿 𑌤𑍇 𑌵𑍀𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾𑌃। 𑌨𑌿𑌧𑌿𑌮𑌿𑌵 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌂 𑌭𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 𑌯𑍇𑌽𑌪𑌿 𑌤𑌨𑍍𑌯𑌾𑌨𑌨𑍁 𑌭𑌗𑌵𑌤𑌿 𑌦𑍈𑌵𑍀𑌂 𑌸𑌮𑍍𑌪𑌦𑌂 𑌤𑍇𑌽𑌭𑌿𑌜𑌾𑌤𑌾𑌃 ॥ ௧௨ ॥

மநஸி விலஸதாக்ஷ்ணா பக்திவித்தாஞ்ஜநேந ச்ருதிசிரஸி நிகூடம் லக்ஷ்மி தே வீக்ஷமாணா:— நிதிமிவ மஹிமாநம் புஞ்ஜதே யேபி தந்யாநநு பகவதி தைவீம் ஸம்பதம் தேபிஜாதா:— ௧௨

[ப—உ]. பகவதி - ஸகல குணவதியான; நநு லக்ஷ்மி - ஏ லெக்ஷ்மியே! தந்யா: - உமது கடாக்ஷத்துக்கு விஷயமாகுகையாகிற பாக்யத்தையுடைய: யேபி - எவர்கள்! பக்திவித்தாஞ்ஜநேந - வித்தாஞ்சனம் போன்றபக்தியையுடையதும்; மநஸி - ஹ்ருதயத்தில்; விலஸதா பிரகாசிக்கிறதுமான அக்ஷ்ணா - ஞானக்கண்ணினால்; ச்ருதிசிரஸி - வேதாந்தத்தில்; நிகூடம் - மறைந்திருக்கிற; தே - உம்முடைய மஹிமாநம் - மஹிமையை நிதிமிவ - நிதியைப்போல; வீக்ஷமாணஸ்ஸந்த: - பார்க்கிறவர்களாய்க்கொண்டு; புஞ்ஜதே - அநுபவிக்கிறார்களோ; தே - அவர்கள் தைவீம், ஸம்பதம், அபி - தைவஸம்பத்தை அபிமுகமாகச்செய்து: ஜாதா:- பிறந்தவர்கள்.

[த—உ] ஸகலகல்யாணகுண ஸம்பந்நையான ஏ ஸ்ரீரங்கநாயகியே உமது கடாக்ஷத்தக்குபாத்ரமாகுகையாகிற பாக்யத்தையுடையதும் நெஞ்சில் விளங்குகிறதுமான ஞானக்கண்ணினால் வேதாந்தத்தில் மறைந்துகிடக்கிற நிதிபோன்ற உமது மஹிமையைக்கண்டனுபவிக்கிறார்களோ அவர்கள் தைவஸம்பத்தை அபிமுகமாகச்செய்து பிறந்தவர்கள்.

अस्येशाना जगत इति ते धीमहे यां समृद्धिं श्रीसूक्तं बहुमुखयते तां च शाखानुशाखम् । ईष्टे कश्चिज्जगत इति यः पौरुषे सूक्त उक्तः तं च त्वत्कं पतिमभिजगावुत्तरश्चानुवाकः ॥ ௧௩ ॥

அஸ்யேசாநா ஜகத இதி தே தீமஹே யாம் ஸம்ருத்தி
ம் ஸ்ரீஸூக்தம் பஹுமுகயதே தாம் ச சாகாநு
சாகம்— ஈஷ்டே கஸ்சிஜ்ஜகத இதி ய: பௌருஷே
ஸூக்த உக்த: தம் ச த்வத்கம் பதிமபிஜகாவுத்தரஸ்
சாநுவாக:— ௧௩

[ப—உ]. ஹே ஸ்ரீ: - ஹேலக்ஷ்மியே !; அஸ்ய - இந்த ஜகத:-உலகத்துக்கு ; ஈசாநா- ஈச்வரி ; இதி-என்று; தே-உம்முடைய; யாம்-எந்த; ஸம்ருத்திம்-ஸம்ருத்தியை; அதீமஹே அத்யயநம் செய்கிறோமோ; தாஞ்ச - அந்தஸம்ருத்தியையும் அதற்கு மேலானதையும்; ஸ்ரீஸூக்தம்-ஸ்ரீஸூக்தமானது; சாகாநுசாகம்யதாததா - கிளைகளை அநுஸரித்த கிளைகளை உடைத்தாயிருக்கும்படி; அதாவது ஸகல்யேன என்றபடி பஹுமுகயதே-வெகுப்ரகாரமாகப்ரதிபாதிக்கிறது. பௌருஷே-புருஷனுடையதான; ஸூக்தே - ஸூக்தத்தில்; அதாவது புருஷஸூக்தத்தில்; கஸ்சித் -ஒரு; புருஷ: -புருஷன்; ஈஷ்டே-உலகங்களை நியமிக்கிறான்; இதி-என்று; ய:-எவன்; உக்த:- சொல்லப்பட்டானோ; தஞ்ச - அவனையும்; உத்தர: - உத்தரமான; அநுவாகஸ்ச - அநுவாகமும்; த்வத்கம்- உமது; பதிம்-பர்த்தாவாக; அபிஜகௌ-சொல்லிற்று.

[க—உ]. ஹே லக்ஷ்மி தேவியே! 'இவ்வுலகத்துக்கு ஈச்

வரி' என்று உமது எந்த ஸம்ருத்தியை அறிகிறேமோ அவை யும் அதற்கு மேலான ஸம்ருத்தியையும், ஸ்ரீஸூக்தம் என் பது ஒன்று குறையாமல் முழுக்க வெகுமுகமாய் ப்ரதிபாதி க்கிறது. புருஷஸூக்தத்தில் "ஒரு புருஷன் உலகங்களை நியமிக்கிறான்" என்று எவன் சொல்லப்பட்டிருக்கிறானோ அவனை உமது பர்த்தா"வென்று உத்தரநாராயணாநுவாகம் சொல்லிற்று. கரு

𑌉𑌦𑍍𑌬𑌾𑌹𑍁𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌮𑍁𑌪𑌨𑌿𑌷𑌦𑌸𑌾𑌵𑌾𑌹 𑌨𑍈𑌕𑌾 𑌨𑌿𑌯𑌂-
𑌤𑍍𑌰𑍀𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌮𑌪𑌿 𑌪𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌤𑌿 𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌿-
𑌤𑍍𑌰𑍇 । 𑌸𑍍𑌮𑌰𑍍𑌤𑌾𑌰𑍋𑌽𑌸𑍍𑌮𑌜𑍍𑌜𑌨𑌨𑌿 𑌯𑌦𑌿𑌮𑍇 𑌸𑍇𑌤𑌿𑌹𑌾-
𑌸𑍈𑌃 𑌪𑍁𑌰𑌾𑌣𑍈𑌰𑍍𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌯𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌾𑌨𑌪𑌿 𑌚 𑌤-
𑌦𑌿𑌮𑍇 𑌤𑍍𑌵𑌨𑍍𑌮𑌹𑌿𑌮𑍍𑌨𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍍 ॥ கசு ॥

உத்பாஹுஸ்த்வாமுபநிஷதஸாவாஹ நைகா நியந்த்ரீம்
ஸ்ரீமத்ராமாயணமபி பரம் ப்ராணிதி த்வச்சரித்ரே—
ஸ்மர்தாரோஸ்மஜ்ஜநநி யதமே ஸேதிஹாஸை: புராணை
ர்நிந்த்யுர்வேதாநபி ச ததமே த்வந்மஹிம்நி ப்ரமாணம்.

[ப—உ]. ஹே அஸ்மத், ஜநநி - ஓய் எங்களுக்குத் தாயே!; அஸௌ-இந்த; உபநிஷதேகா-ஸ்ரீஸூக்தமென்கிற உபநிஷத்துமட்டில்; உத்பாஹுஸ்ஸதீ-உயரத் தூக்கிய கைக ளையுடையதாய்க்கொண்டு; த்வாம்-உம்மை; நியந்த்ரீம்-உலகத் துக்கு ஸ்வாமிநியாக; நாஹ-சொல்லிற்றில்லை; (கிந்து)-பின் னையோவென்றால்; ஸ்ரீமத்ராமாயணமபி-ஸ்ரீ ராமாயணமும்; த்வத், சரித்ரே-உமது சரித்ரத்தில்; பரம்-மிகவும்; ப்ராணிதி ஜீவிக்கிறது ; யதமே-எந்த ரிஷிகள்: ஸ்மர்த்தார:-ஸ்ம்ருதி

களைச்செய்தார்களோ; தத்மே -அவர்கள்; வேதாநபிச-வேதங்களையும்; ஸேதிஹாஸை: - இதிஹாஸங்களுடன் கூடிய; புராணை: -புராணங்களுடன்; த்வத்,மஹிம்நி-உமது விபவத்தில் (மஹிமையில்); ப்ரமாணம்-ப்ரமாணமாக; நிந்யு: -நயநம் பண்ணினார்கள் (ஆக்கினார்கள்).

[௧—௨]. ஒப் எங்கள் தாயே! இந்த ஸ்ரீஸூக்தமென்கிற உபநிஷத்து மட்டில்தானே உயரத்தூக்கிய கைகளையுடையதாய்க்கொண்டு உம்மை உலகத்துக்கு ஸ்வாமிநியாகச்சொல்லவில்லை. ஸ்ரீராமாயணமும் உமது சரித்ரத்தில் மிகவும் ஜீவிக்கிறது. அதாவது ஸ்ரீராமாயணமும் உமது சரித்ரத்தைச் சொல்லுகிறது. எந்த ரிஷிகள் ஸ்ம்ருதிகளைச் செய்தார்களோ அவர்கள் வேதங்களை இதிஹாஸபுராணங்களுடன் உமது மஹிமையில் ப்ரமாணமாக்கினார்கள். ௧௪

𑌆𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌯𑌾𑌮𑌕𑌾𑌦𑌪𑌿 𑌵𑌿𑌭𑍋𑌰𑌾𑌸𑌰𑍍𑌵𑌨𑌿𑌰𑍍𑌵𑌾-
𑌹𑌕𑌾𑌦𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌯𑌦𑌿𑌹𑍋𑌤𑍍𑌤𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑌗𑌣𑌂 𑌶𑍍𑌰𑍀-
𑌰𑌙𑍍𑌗𑌭𑌰𑍍𑌤𑍁𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑍇 । 𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌮𑌙𑍍𑌗𑌳𑌮𑍁𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌂 𑌗𑌰𑌿𑌮-
𑌵𑌤𑍍 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌪𑌾𑌵𑌨𑌂 𑌧𑌨𑍍𑌯𑌂 𑌯𑌤𑍍𑌤𑌦𑌸𑍍𑌯 𑌵𑍀-
𑌕𑍍𑌷𑌣𑌭𑍁𑌵𑌸𑍍𑌤𑍇 𑌪𑌞𑍍𑌚𑌷𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑍁𑌷𑌃 ॥ ௧௫ ॥

ஆக்ராமந்யாமகாதபி விபோராஸர்வநிர்வாஹகாதைச்வர்யம் யதிஹோத்தரோத்தரகுணம் ஸ்ரீரங்கபர்த்து: ப்ரியே— துங்கம் மங்களமுஜ்ஜ்வலம் கரிமவத் புண்யம் புந: பாவநம் தந்யம் யத்ததஸ்ச வீக்ஷணபுவஸ்தே பஞ்சஷா விப்ருஷ:— ௧௬

[ப—உ]. ஹே ஸ்ரீரங்கபர்த்து:ப்ரியே - ஸ்ரீரங்கராஜனுக்கு வல்லபையே; இஹ-இவ்வுலகத்தில்; ஆக்ஷுத்ராமநியாமகாத்- க்ஷுத்ரமாதிகாரிமுதல்; ஸர்வநிர்வாஹகாத் - ஸர்வலோகநியந்தாவான; ஆ விபோரபி-விபுவான ப்ரம்மபர்யந்தம்; உத்தரோத்தர குணம் -மென்மேலும் அதிசயிதமான; யத்-எந்த ஐச்வர்யம் (இருக்கிறதோ அதுவும்); துங்கம் - உயர்ந்த மேரு முதலியதும்: மங்களம்-சந்தனம் புஷ்பம் முதலிய மங்களத்திரவ்யமும்; உஜ்வலம்-மணி தீபம் முதலிய தேஜோத்ரவ்யமும்; கரிமவத்- இமயம் மந்தரம் முதலிய கனமுள்ளத்ரவ்யமும்; புண்யம் - பரலோகஸாதகமான யாகம் முதலியதும்; புந: -மறுபடியும்; பாவநம்-பரிசுத்தி பண்ணிவிக்கிற காவேரி முதலியதும்; தந்யம் - பாக்கியபலபூதமான நவநிதிரூபமுமான; யத்-எந்த ஐச்வர்யமுண்டோ: தத், அதஸ்ச- அந்த, இந்த ஐச்வர்யமும்; தே - உம்முடைய; வீக்ஷணபுவ: - கடாக்ஷத்திலுண்டாகிய; பஞ்சஷா: -ஐந்து ஆறு; விப்ருஷ: —திவிலைகள் (லேசங்கள்).

[க—உ]. ஹே ஸ்ரீரங்கராஜவல்லபையே! அல்பக்ஷுத்ரமாதிகாரிமுதல் ஸகலலோகநிர்வாஹகனான பரமாத்மா வரையில் மென்மேலும் உயர்ந்த எந்த ஐச்வர்யமுண்டோ அந்த ஐச்வர்யமும் மேருமுதலான உயர்ந்த த்ரவ்யங்களும் சந்தநபுஷ்பாதிகளான மங்களத்ரவ்யங்களும் மணி சூரியன் முதலான தேஜ:பதார்த்தங்களும் மந்தரம் இமயம் முதலிய கனபதார்த்தங்களும் பரலோகஸாதநமான புண்யக்ரியைகளும் காவேரி முதலிய பாவன பதார்த்தங்களுமான ஐச்வர்யமுண்டோ அதுவும் இதைப்போன்ற மற்ற ஐச்வர்யமும் உமது கடாக்ஷத்தின் ஐந்தாறு திவிலைகளினால் உண்டாகின்றன. கடு

[illegible]

ஏகோ முக்தாதபத்ரப்ரசலமணிகணத்காரிமௌளிர்ம
நுஷ்ய: த்ருப்யத்தந்தாவளஸ்தோ ந கணயதி நதாந்
யத்க்ஷோணிபாலாந்—யத்தஸ்மை திஷ்டதே
ந்ய: க்ருபணமசரணோ தர்சயந் தந்தபங்க்திம் தத் தே
ஸ்ரீரங்கராஜப்ரணயிநி நயநோதஞ்சிதஞ்சிதாப்யாம்

[ப—உ]. ஹே ஸ்ரீரங்கராஜப்ரணயிநி - ஹே ஸ்ரீரங்க ராஜனின் தயிதையே!: ஏக: - ஒரு; மநுஷ்ய:—மனிதன்: த்ருப்யத், தந்தாவள, ஸ்த:-மதித்த யானையின்மேல், இருந்து கொண்டும்: முக்தா, ஆதபத்ர, ப்ரசல, மணி, கணத்காரி மௌளி: - முத்துமயமான, குடையில், அசைகிற, மணிகளால், சப்திக்கிற க்ரீடத்தை உடையவனுய்க்கொண்டும்; நதாந் - வணங்கின; க்ஷோணிபாலாந் - அரசர்களை; ந கணயதி யத் - மதிக்கிறுனில்லை என்கிறது யாதொன்றுண்டோ; அந்ய:-வேறுமனிதன்; அசரண:-புகலற்றவனுய்; க்ருபணம் (யதா ததா) -தீனமாயிருக்கும்படி; தந்தபங்க்திம்-பற்களின் வரிசையை; தர்சயந் - காண்பிவித்துக்கொண்டு; தஸ்மை - அந்த யானையின்மேலிருக்கிற மனிதனின்பொருட்டு; திஷ்டதே - தனது அபிப்ராயத்தைத் தெரிவிக்கிறுன் (என்பது யாதொன்றுண்டோ) தத் - அந்த இரண்டும்; தே - உம்

முடைய; நயந, உதஞ்சித, ந்யஞ்சிதாப்யாம் - திருக்கண்களு டைய திறத்தல், மூடுதலிவைகளால் (பவதி) உண்டாகிறது,

[க—உ]. ஹே ஸ்ரீரங்கராஜதயிதையே! ஒரு மனிதன் மதித்த யானையின்மேலிருந்துகொண்டும் முத்துமயமான குடையில் அசைகிற மணிகளால் சப்திக்கிற கிரீடத்தையுடையவனாய்க்கொண்டும் தன்னை வணங்கின அரசர்களை மதிக்கிறானில்லை என்பதும் மற்றொருவன் புகலற்றவனாய் தீனமாயிருக்கும்படி பல்வரிசைகளை அந்த யானையிலிருப்பவனுக்குக் காண்பிவித்துக்கொண்டு தனது அபிப்ராயம் தோற்ற நிற்பதென்பதும் உமது, திருக்கண்களின் கடாக்ஷத்தினாலும் திருக்கண்களின் மூடுதலாலும் அடையவே உண்டாகிறதுகள். கசு

[illegible] ॥ கஎ ॥

ரதிர்மதிஸரஸ்வதீத்ருதிஸம்ருத்திஸித்திச்ரியஸ்ஸுதா ஸகி யதோமுகம் சிசவிஷேத்தவ ப்ரூலதா— ததோ முகமதேந்த்ரே பஹூமுகீமஹம் பூர்விகாம் விகாஹ்ய ச வசம்வதா: பரிவஹந்தி கூலங்கஷா:— கஎ

[ப—உ]. ஹே ஸுதாஸகி - ஏ அம்ருதஸஹோதரியானவளே; இந்திரே - லக்ஷ்மியே!; தவ - உம்முடைய; ப்ரூலதா - கொடிபோன்ற புருவமானது; யதோமுகம் - எந்த

புருஷனுக்கு நேராக; சிசலிஷேத் - அசையவிரும்புகிறதோ; தமேவமுகம் - அந்த புருஷனுக்கு நேராக; ரதி: - ப்ரீதி; மதி, ஸரஸ்வதி, த்ருதி, ஸம்ருத்தி, ஸித்தி, ச்ரிய: - ஞானம் வாக்கு, தைரியம், பூர்த்தி, இஷ்டப்ராப்தி, ஸம்பத்து இவை கள்; பஹுமுகீம் - வெகு ப்ரகாரமான; அஹம்பூர்விகாம் - நான்முன் நான்முன் என்கிற அஹங்காரத்தை; விகாஹ்ய - அடைந்து; வசம்வதா: - வசவர்த்திநிகளாயும்; கூலம்கஷா: - கரைபுரண்டதுகளாயும்; பரிவஹந்தி - (பிள்ளை பேரன் முத லிய ஜந்மஸந்தாநத்திலும் சிஷ்யன் ப்ரசிஷ்யன் முதலிய ஞான ஸந்தாநத்திலும்) பரம்புகிறதுகள். கஎ

[க—உ]. ஹே அம்ருத ஸஹோதரியான லக்ஷ்மியே! உமது கொடிபோன்ற புருவம் எந்த ஜநத்துக்கு நேராக அசையவிரும்புகிறதோ அந்த ஜநத்துக்கு நேராக ப்ரீதி, ஞானம், வாக்கு, தைரியம். பூர்த்தி, இஷ்டப்ராப்தி ஸம் பத் இவைகள் நான்தான் முன்னே ப்ரவேசிக்கிறேனென்று சொல்லுகையாகிற அஹங்காரத்தையடைந்து விதேயைகளா யும் கரைபுரண்டதுகளாயும் ஞானஸந்தானம் ஜந்மஸந்தான மென்கிற இரண்டு ஸந்தாநங்களிலும் பரவுகிறதுகள். கஅ

𑌸𑌹𑌸𑍍𑌰𑌪𑌰𑌿𑌤𑍍𑌰 𑌸𑌵𑍍𑌰𑌜𑌵𑌿𑌰𑌿𑌞𑍍𑌚𑌨𑌾𑌕𑌿𑌙𑍍𑌕𑌰𑍈𑌰𑍍𑌨-
𑌰𑌨𑌾𑌕𑌹𑌵𑍍𑌯 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿 𑌪𑍍𑌰𑌬𑌲𑌵𑌿𑌕𑍍𑌲𑌵 𑌪𑍍𑌰𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ।
𑌇𑌦𑌂 𑌸𑌦𑌸𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌨𑌿𑌖𑌿𑌲𑌮𑍇𑌵 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌣𑌤𑌃
𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌤𑌃 𑌤𑌵 𑌪𑍍𑌰𑌭𑌵𑌤𑌿 𑌹𑌰𑌿𑌵𑌕𑍍𑌷𑌸𑍍𑌥𑌲𑌾𑌞𑍍𑌚𑌲𑍇 ॥

ஸஹஸ்திரபரித்ரஸவ்ரஜவிரிஞ்சநா கிஞ்சரைநரநாகஹ ப்ருஹஸ்பதிப்ரபலவிக்லபப்ரக்ரியம்— இதம் ஸதஸதா

த்மநா நிகிலமேவ நிம்னோந்நதம் கடாக்ஷதது பேக்ஷ
யோஸ்தவ ஹி லக்ஷ்மி தத்தாண்டவம்— கஅ

[ப—உ]. ஹே லக்ஷ்மி! - ஹே லக்ஷ்மியே! ஸ்திர, பரித்ரஸ, வ்ராஜ, விரிஞ்சந, அகிஞ்சநஸ்ஸஹ - ஸ்தாவரங்கள், ஜங்கமங்கள் இவைகளின் ஸமூஹங்கள், ப்ரம்மா, தரித்திரனிவர்களுடன் கூட; அநோகஹ, ப்ருஹஸ்பதி, ப்ரபல, விக்லப, ப்ரக்ரியம் - வ்ருக்ஷங்கள், தேவகுரு, பலமுள்ளவன், துர்ப்பலன் இவர்களுடைய ப்ரகாரத்தையுடையதான; இதம் - இந்த; நிகிலமேவ; ஸமஸ்தமும்; ஸதஸதாத்மநா - நல்லது கெட்டது என்கிற ரூபத்தினால்; நிம்நோந்நதம் - தாழ்ந்தும் உயர்ந்தும் இருக்கிறது (எதுவோ) தத் - அது; தவ - உம்முடைய; கடாக்ஷததுபேக்ஷயோ: - கடாக்ஷித்தல், கடாக்ஷியாமை இவைகளின்: தாண்டவம் ஹி - நடனமன்றோ!

